O.S.No. 33/2022 நாள் 29.07.2025 PW 1 – திருமதி. மல்லிகா

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை( 6ம் பிரதிவாதிதரப்பில்)

தாவா சொத்துக்கள் என் தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம் வாதி என் தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். என் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் நாங்கள் சிறுவயதாக இருக்கும்போது இறந்துவிட்டார். என் சகோதரர் நாராயணன் இறந்து எவ்வளவு வருடம் ஆகிறது என்றால் 23 வருடங்கள் ஆகிறது. என் சகோதரர் நாராயணனின் வாரிசுகள்தான் 1 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். நான், 1ம் வாதி, நாராயணனின் வாரிசுகள், என் அம்மா, என் அப்பா ஆகியோர்கள் தாவா சொத்துக்களின் வாரிசுகள் என்றால் சரிதான். என் தங்கை 6ம் பிரதிவாதிக்கு ¼ பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி சந்திரபுஷ்பம் இந்த வழக்கில் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.